தந்தையர் தினத்தை பேணுவோம் வாழ்த்தினைப் பெறுவோம் ! அவர் வாழ்த்தை வேண்டுகிறேன் !

Written by - மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா, மெல்பேண், அவுஸ்திரேலியா -
Sunday, 16 June 2019 01:22 - Last Updated Sunday, 16 June 2019 01:35

விரதமெல்லாம் தானிருந்து
விரும்பியெனை இறைவனிடம்
வரமாகப் பெற்றவரே
வாய்மைநிறை என்னப்பா
விரல்பிடித்து அரிசியிலே
எழுதவைத்த என்னப்பா
உரமாக என்னுள்ளே
உணர்வோடு கலந்துவிட்டார் !

தோள்மீது எனைத்தூக்கி
தான்மகிழ்ந்து நின்றிடுவார்
வாழ்நாளில் வீழாமல்
வளரவெண்ணி பலசெய்தார்
மெய்வருத்தம் பாராமல்
எனையெண்ணி தானுழைத்தார்
கண்ணெனவே காத்துநின்றார்
கருணைநிறை என்னப்பா !

பொட்டுவைத்த என்முகத்தை
கட்டிக்கட்டி கொஞ்சிடுவார்
பட்டுச்சட்டை வாங்கிவந்து
பரவசத்தில் மூழ்கிடுவார்
இஷ்டமுடன் தன்மார்பில்
எனையுறங்க வைத்திடுவார்
அஷ்ட ஐஸ்வரியமென்று
அனைவர்க்கும் சொல்லிடுவார் !

நானுண்ட மிச்சமெல்லாம்

1 / 2

தந்தையர் தினத்தை பேணுவோம் வாழ்த்தினைப் பெறுவோம் ! அவர் வாழ்த்தை வேண்டுகிறேன் !

Written by - மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா, மெல்பேண், அவுஸ்திரேலியா -
Sunday, 16 June 2019 01:22 - Last Updated Sunday, 16 June 2019 01:35

தானெடுத்து சுவைத்திடுவார்
அவர் பாதி நானென்று
அவருக்குள் எண்ணிடுவார்
உலகிலென்னை உயர்ந்தவனாய்
உருவாக்க உருவானார்
நிலவுலகில் என்னப்பா
நிகரில்லா தெய்வமன்றோ !

பட்டம் பல நான் பெற்றேன்
பதவிகளும் வகித்துநின்றேன்
கஷ்டம் பல பெற்றாலும்
கைகொடுத்தார் எந்தனப்பா
விருதுகளோ எனையணுகி
விரும்பிவந்து சேர்ந்தனவே
விரும்பிநின்ற என்னப்பா
விண்ணுலகு சென்றுவிட்டார் !

ஆளாக்கிவிட்ட எந்தன்
அன்புநிறை அப்பாவை
அனுதினமும் எண்ணியெண்ணி
அலமந்து நிற்கின்றேன்
ஆண்டவனின் திருவுருவாய்
அப்பாவைக் காணுகிறேன்
அவர் நினைப்பை மனமிருத்தி
அவர் வாழ்த்தை வேண்டுகிறேன் !

jeyaramiyer@yahoo.com.au

2 / 2